1979 ஏப்ரல் 27]

ஒன்றியப் பகுதிகளில் குடும்பநலத்திட்டப் பணிகள்.

*வினா எண். 853—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்ப நலத்திட்ட அறுவை சிகிச்சைக்கு ஆட்கள் கொண்டுவராததிற்காக ஒன்றிய சிப்பந்திகளுக்குக் கிடைத்து வந்த சலுகைகளை நிறுத்தம் செய்ய அரசு உத்திரவிட்டுள்ளதா ?

(ஆ) இல்லையெனில், கடையம் ஒன்றிய சிப்பந்திகளுக்கு சலுகைகளை நிறுத்த இருப்பது ஏன் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து. (அ) இல்லை.

(ஆ) கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றும் 30 பணியாளர்கள் தேசீய குடும்ப நலத் திட்டத்தின் மீது எந்தவித அக்கறையும் காட்டாததால் அவர்களது 1979 பிப்ரவரி மாதத்திய நிரந்தர பயணப்படி தற்காலிகமாக நிறுத்தப்பட்டதாகத் தெரிய வந்ததன் பேரில் மீண்டும் அதை வழங்க தக்க ஆணை பிறப் பிக்கப்பட்டுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இப்பொழுது அமைச்சர் அவர் கள் தன்னுடைய பதிலிலே கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் 30 பணியாளர்களுக்கு பிப்ரவரி மாதத்தில் தரவேண்டிய நிரந்தர பயணப்படி நிறுத்தப்பட்டு, இப்பொழுது தருவதற்கு உத்தர விடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இப்படி அரசின் அனுமதி யில்லாமல் அரசு அதிகாரிகள் ஆணை பிறப்பிப்பதைத் தடுப் பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியத்தில் சில அதிகாரிகள் இப் படிப்பட்ட நடவடிக்கையைச் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு தக்கபடி அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இனிமேல் இப் படிப்பட்ட நிலைமை ஏற்படாது என்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.